---

# ஹொரண நகர சபை

## களுத்துறை மாவட்டம்

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 10 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 13 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, ஹொரண நகர சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஹொரண நகர சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டிற்காக முன்னைய ஆண்டின் போது கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 226,990 தொகையான வீதவரி மீளாய்வாண்டின் போது வீதவரி வருமானத்திற்கு கணக்கீடு செய்யப்படுவதற்காக திரண்ட நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2013 யூலை 01 வரையிலும் கொள்வனவு செய்யப்பட்டிராத இயந்திரத்திற்காக ரூபா 633,432 செலுத்தப்பட வேண்டிய செலவினமாகக் கருதப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டு சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின் போது சம்பள மீளளிப்பிலிருந்து அறவிடப்பட்டிருந்த முன்னைய ஆண்டுகளுக்கு உரித்தான ரூபா 3,690,744 தொகையான ஓய்வூதியச் சம்பளப் பங்களிப்புத் தொகை திரண்ட நிதியக் கணக்கு வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக நடப்பாண்டின் செலவினக் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. இதற்காக முன்னைய ஆண்டுகளின் கடன்கொடுத்தோர் ஏற்பாடு இன்மையால் மீளாய்வாண்டின் இறுதியிலான கடன்கொடுத்தோர் மீதி அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டின் கைத்தொழில் கடன்பட்டோருக்காக ரூபா 990,132 மாத்திரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் இதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 12,140,936 தொகை பெறப்பட்டு அத் தொகை கைத்தொழில் கடன்பட்டோர் கணக்கிற்கு (நிலுவையான வேறு வருமானக் கணக்கிற்கு) கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக் காணப்பட்ட வேறு வருமானக் கணக்கு மீதி ரூபா 11,150,804 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 51,612,310 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,730,375 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 24,109,922 ஆக இருந்தது.

**2.2 வங்கிக் கணக்குகள்**

(அ) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பெயரில் ஆரம்பிக்கப்பட்டிருந்த வங்கி நடைமுறைக் கணக்கு மற்றும் மக்கள் வங்கியின் நடைமுறைக் கணக்கு என்பன 2006 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் அத்திகதி தொடக்கம் அந்த இரண்டு கணக்கிலும் முறையே ரூபா 99,885 மற்றும் ரூபா 941,985 தொகைகள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(ஆ) 1973 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தேசிய சேமிப்பு வங்கியின் கொழும்பு நகரக் கிளையில் ஆரம்பிக்கப்பட்டிருந்த சேமிப்புக் கணக்கொன்று இருந்ததுடன் இது எந்த பணத்தொகைக்காக ஆரம்பிக்கப்பட்டதென்பது குறித்த விளக்கமும் உறுதிப்படுத்தலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அக் கணக்கில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 734,331 தொகையான மீதி காணப்பட்டது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 10,650 | 9,901 | 5,612 |
| (ii) | வாடகை | 10,492 | 9,389 | 2,534 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,788 | 2,248 | -- |
| (vi) | ஏனை வருமானம் | 13,439 | 13,435 | 59,867 |

### 2.3.2 வீதவரி

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையான வீதவரி மீதி ரூபா 4,146,119 ஆகக் காணப்பட்டதுடன் இதில் கணக்காய்வுத் தினமாகிய 2013 யூன் 24 ஆம் திகதி வரையிலும் ரூபா 911,942 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தமையால் மேலும் ரூபா 3,234,176 தொகையான நிலுவை மீதி காணப்பட்டது.

### 2.3.3 வியாபார வரி மற்றும் வேலை வரி

2011 ஆம் ஆண்டிற்கு உரித்தான ரூபா 28,200 தொகையும் 2012 ஆம் ஆண்டிற்கு உரித்தான ரூபா 80,520 தொகையுமாக 58 வியாபார நிலையங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய வியாபார வரியின் கூட்டுத்தொகை

ரூபுா 111,720 தொகையும் 2011 ஆம் ஆண்டிற்கு உரித்தான ரூபா 6,000 தொகையான நிலுவையான வேலை வரி மீதியும் கணக்காய்வுத் தினம் வரை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 கடை வாடகை**

69 வாடகை செலுத்துனர்களிடமிருந்து 1989 ஆம் ஆண்டு முதல் நிலவி வரும் அறவிடப்பட வேண்டிய ரூபா 426,930 தொகையான நிலுவை கடை வாடகை மீதி 2006 முதல் 2012 வரையான ஆண்டுகளுக்கு உரிய ரூபா 763,287 தொகையான நிலுவை கடை வாடகை மீதியும் 2013 மே 30 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 வியாபார நிலைய வாடகை**

4 வியாபார நிலையங்களுக்குரிய உடன்படிக்கைகளின் செல்லுபடிக்காலத்தை மீறி பல வருட காலம் கடந்திருந்த போதிலும் அவற்றைப் புதுப்பிப்பதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2013 யூன் 30 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அந் நபர்களால் தொடர்ந்து கடைகள் நடாத்தப்பட்டிருந்தன.

**2.3.6 விடுதிக் கட்டணங்கள்**

2012 ஆம் ஆண்டிற்கு உரித்தாக ரூபா 940,800 தொகையான நிலுவை வருமானம் அறவிடப்படுவதற்கு 2013 யூன் 30 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.7 விளம்பரப் பலகைக் கட்டணங்கள்**

2012 ஆம் ஆண்டின் போது சபையால் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு இனங்காணப்பட்டிருந்த விளம்பரப் பலகைகளுக்கு உரித்தான 23 நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 125,500 தொகையான விளம்பரப் பலகைக் கட்டணங்கள் கணக்காய்வுத் தினமாகிய 2013 யூன் 30 வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.8 நீதிமன்றத் தண்டப் பணம்**

1980 இன் 26 ஆம் இலக்க உணவு மற்றும் ஔடத ஏற்பாடுகள் அதிகாரச் சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு இணங்காத வகையில் நகரசபை எல்லையில் உணவு விற்பனை செய்யப்பட்ட இடங்களுக்கு எதிராக சபையால் 2012 திசெம்பர் 19 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட 07 சுற்றிவளைப்பின் மூலம் அவ் வியாபாரிகளுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கிற்காக அறவிடப்பட்டிருந்த ரூபா 69,000 இல் சபைக்குப் பெறவேண்டிய பணம் கணக்காய்வுத் தினமாகிய 2013 யூன் 30 வரையிலும் சபையால் பெறப்பட்டிருக்கவில்லை.

**2.4 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

நிறுவனத்தின் இலக்கு மற்றும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 3 வருடங்களுக்கு குறையாத காலத்திற்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டுடன் ஆண்டின் போது மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஒவ்வொரு செயற்பாடுகளினதும் நிதிப் பெறுமதி மற்றும் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதிகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. வருடாந்தக் கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

3 வருமான விடயங்கள் மற்றும் ஒவ்வொரு செலவின விடயத்திற்கும் 12% முதல் 39% வரையான வீச்சில் சாதகமான முரண் ஒன்று கண்டறியப்பட்டதுடன் 2 வருமான விடயங்களும் 4 செலவின விடயங்களும் 10 சதவீதம் முதல் 64 சதவீதம் வரையான வீச்சில் பாதகமான முரண் கண்டறியப்பட்டது. இதன் படி பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 128, 132, 134 மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் 2008 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய டபிள்யூபீ/எல்ஜீடீ/10/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் படி உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று செயற்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) பாதீடு